# க.பொ.த. உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

தமிழ் - II | T | 72 | II | சுட்டெண்:............................

மூன்று மணித்தியாலம் | மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

* பகுதி - I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும் பகுதி - II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

**01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**ஒவ்வொரு கூற்றுக்களுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையை தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1.1. சார்பெழுத்தாக அமைவது,
1. க 2. ஔ 3. அ
4. த் 5. இ (............)

1.2. ‘க’ கரம் மாறுபட்டு ஒலிக்கும் சொற்கள்
1. சோகம், மோகம் 2. சிங்கம், தங்கம் 3. திங்கள், மக்கள்
4. கடல், கோடு 5. அக்கா, சிக்கல் (............)

1.3. வேற்றுநிலை மெய் மயக்கமாக மட்டும் அமையும் எழுத்துக்கள்
1. த், ப் 2. ர், த் 3. க், ச்
4. ல், ள் 5. ர், ழ் (............)

1.4. அகப் புணர்ச்சி இடம்பெறும் சொல்
1. மட்குடம் 2. கண்காட்சி 3. காட்சி
4. பட்டாடை 5. வெட்கம் (............)

1.5. இயல்புப் புணர்ச்சியாக அமைவது
1. மண்ணால் 2. பெண்ணால் 3. ஆணால்
4. கண்ணால் 5. பொன்னால் (............)

1.6. அத்துச் சாரியை பெறாது அமைந்த சொல்
1. பத்துக்கு 2. மரத்துக்கு 3. காலத்துக்கு
4. நெஞ்சத்துக்கு 5. பஞ்சத்துக்கு (............)

1.7. ‘இன்’ சாரியையாக இடம்பெறாத சொல்,
1. வீட்டிற்கு 2. நாட்டிற்கு 3. காட்டிற்கு
4. பொன்னிற்கு 5. நாட்டுக்கு (............)

1.8. நாங்கள் பரீட்சை மண்டபத்துக்கு வந்தோம் இங்கு 'ஓம்' விகுதி உணர்த்துவது
1. இறந்த காலப் பன்மை 2. தன்மைப் பன்மை 3. முன்னிலைப் பன்மை
4. படர்க்கைப் பன்மை 5. நிகழ் காலப் பன்மை (............)

1.9. பின்வருவனவற்றில் 'தாங்கள்' என்பது படர்க்கை தற்சுட்டுப் பெயராக அமைவது
1. தாங்கள் எப்ப வருவீர்கள்?
2. தங்கள் வரவு நல் வரவாகுக
3. தங்களை எங்கு சந்திக்கலாம்?
4. அவர்கள் தங்கள் இருப்பிடம் நோக்கிச் சென்றார்கள்?
5. தங்கள் இருப்பிடம் எங்குள்ளது? (............)

1.10.மண்வீடு, மரவேர், கைவிளக்கு இவை எவ்வகைச் சொற்கள்?
1. கூட்டுப் பெயர் 2. பண்புத் தொகை 3. வேற்றுமைத் தொகை
4. ஆகுபெயர் 5. காரணப் பெயர் (............)

1.11.மாணவர்கள் பரீட்சையை மண்டபத்தில் எழுதினார்கள். இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமைப் பொருள்கள்.
1. எழுவாய், இடம்
2. செயப்படுபொருள், இடம்
3. கருத்தா, கருவி, இடம்
4. எழுவாய், செயப்படுபொருள், இடம்
5. கருத்தா, செயப்படுபொருள், இடம் (............)

1.12.அளவு உணர்த்தும் வினையடையாக அமைவது
1. அவன் அடிக்கடி வருகிறான்
2. நான் தினமும் குளிப்பேன்
3. அவர் எப்போதாவது புகைப் பிடிப்பார்
4. மக்கள் ஏராளமாக வந்திருந்தார்கள்
5. பொலிசார் திடீர் திடீரெனச் சோதிக்கிறார்கள் (............)

1.13.'ஐந்து பேரும் நல்ல தொழில் செய்கிறார்கள்' உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்
1. எதிர்மறை 2. முற்று 3. ஐயம்
4. எச்சம் 5. தெரிநிலை (............)

1.14.'செய்து' என்னும் எச்சத் தொடர் கொண்ட வாக்கியம்,
1. வாணி பாட கமலா ஆடினாள்
2. நான் புத்தகங்களை வாசித்துப் பொழுது போக்கினேன்
3. நான் தேநீர் குடிக்க அப்பா வந்தார்
4. நானும் அம்மாவும் சந்தைக்குச் சென்றோம்
5. மக்கள் ஒன்று கூடினர் (............)

1.15.'காணாமல் போன தந்தை பற்றிய சிந்தனை அவனை வாட்டிக் கொண்டிருந்தது' மேற்படி வாக்கியத்தின் எழுவாய்த் தொடர்.
1. தந்தை பற்றிய சிந்தனை
2. காணாமல் போன தந்தை
3. அவனை வாட்டிக்கொண்டிருந்தது
4. வாட்டிக் கொண்டிருந்தது
5. காணாமல் போன தந்தை பற்றிய சிந்தனை (............)

1.16.செயப்படுபொருள் குன்றிய வாக்கியம்,
1. அவன் வேகமாக நடந்தான்
2. அவன் வேலையை எதிர்பார்த்துக் காத்திருந்தான்
3. அவன் தனது இலட்சியத்தை நோக்கிப் பயணித்தான்
4. அவன் தேநீரைக் குடித்தான்
5. அவன் நேரசூசியைக் கையில் எடுத்துக் கொண்டு சென்றான் (............)

1.17.உருபு சேரும்போது உடம்படு மெய் தோன்றிப் புணர்ந்த சொல்
1. கிளியை 2. எலியால் 3. அப்பாவுடன்
4. தீயை 5. பூனையால் (............)

1.18.பின்வருவனவற்றுள் கடப்பாட்டு ஏவலாக அமைவது.
1. வாருங்களேன் 2. செய்யேன் 3. சொல்லுங்களேன்
4. சொல்லுங்கள் 5. நில்லேன் (............)

1.19.கூட்டுப் பகுதியாக அமையும் சொல்
1. சித்திரித்தான் 2. சிந்தித்தான் 3. புசித்தான்
4. கைவிட்டான் 5. நடப்பித்தான் (............)

1.20.அவனிடம் உன்னைப் பற்றிச் சொல்லி வைத்துக் கொள்கின்றேன். இதில் இடம்பெற்ற முதல் வினை
1. அவன் 2. இடம் 3. சொல்
4. வை 5. கொள் (............)

(20 புள்ளிகள்)

**02.**

**அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

“கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்பது நம்மிடையே தொன்றுதொட்டு வழங்கி வரும் வழக்காகும். இக் கூற்றிலே கோயிலின் முக்கியத்துவம் மட்டுமன்றி சமூக முக்கியத்துவமும் உள்ளடக்கியிருக்கின்றது என்று கருத வேண்டும். புனிதத் தன்மையும் சமூகப் பண்பாடும் ஒருங்கிணைந்து செயற்படுவதைக் கோயில் வழிபாட்டில் காணலாம். சைவ சித்தாந்தம் கோயில் வழிபாட்டிற்கு முக்கியமான இடத்தினை அளித்துள்ளது. கோயில் தத்துவமும் எமது வாழ்க்கையிலும் வரலாற்றிலும் ஆழமாய்ப் பதிந்த ஒன்றாய் இருந்து வந்துள்ளது. இதனாலேயே ‘பள்ளித் தலமனைந்தும் கோயில் செய்குவோம்’ என்று பாரதி பாடினான்.

இடைக்காலத்தில் கல்வி, கலைகள் பொருளாதாரம் மருத்துவம் விவசாயம் முதலியன யாவும் கோயிலை மையமாகக் கொண்டு இயங்கின எனவே, இந்துக் கோயில்கள் இடைக் காலத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டன. அன்றைய பொருளாதாரச் சமூக அமைப்பில் கோயில் பெற்றிருந்த உயர்ந்த நிலையை இது எடுத்துக்காட்டுகின்றது. அதேசமயம் கோயிலின்பால் மக்கள் கொண்டிருந்த மானசீக உணர்வும் வெளிப்படுகின்றது. இரண்டும் சேர்ந்தே கோயிலுக்கு முழுமையைக் கொடுத்தன. இதனாலேயே கோயில்களைப் பண்பாட்டுத் தலங்கள் என்று சிறப்பித்துக் கூறுகின்றனர். பிற்காலத்தில் தெய்வபக்திக்கு சமமாக தேசபக்தி போற்றப் பட்டது. அதே சமயம் ‘செய்யும் தொழிலே தெய்வம்’ எனும் நிலையும் பிற்காலத்தில் எழுந்தது. கோயில் தத்துவம் வலுவிழந்து புதிய நிலை பெற்றதை இது சுட்டி நிற்கின்றது.

(13 புள்ளிகள்)

**ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

இலக்கியம் ஒரு கலை. கலையென்றால், சொல்லுகிற அல்லது சொல்ல விரும்புகிற செய்திகளை அழகும் நேர்த்தியும்படச் சொல்வது. பிளேட்டோ முதன் முதலில் கலையின் கருத்தை "மைமேசிஸ்" என்று உருவாக்கினார், இது கிரேக்க மொழியில் நகலெடுப்பது அல்லது பின்பற்றுவது என்று பொருள். மொழியை ஊடிழையாகக் கொண்டு அமையும் இந்தக் கலை, நுண்கலை என்றும் பயன்கலை என்றும் சொல்லப்படுகிறது. நுண்மையான உறுப்புக்களையும், நுண்ணிய திறன்களையும் நுண்ணிய உணர்வுகளையும் கொண்டது நுண்கலை. கவிதை, இசை, ஆடல், ஓவியம் முதலியன இதனுள் அடங்கும். பயன்களை முக்கிய நோக்கமாகக் கொண்டது பயன்கலை. இலக்கியம் இதனுள்ளும் அடங்கும். கட்டடக் கலை மற்றும் அண்மையில் தோன்றிய திரைப்படக் கலை முதலியவையும் பயன்கலைகள் ஆகும். பழந்தமிழில் சிலம்பு முதற்கொண்ட பல நூல்களில் ஆடல், பாடல், இசையுடன் தொடர்புபட்டவையாக இயல் இசை, நாடகம் என்று மூன்று கலைகளும் ஒன்றோடு ஒன்று இணைந்தும் தழுவியும் வருபவையாகக் கூறப்படுகின்றன. இயல் என்பது பாடல் அல்லது கவிதையைக் குறிக்கும். இந்த மூன்று கலைகளும் சேர்ந்து முத்தமிழ் என்று சொல்லப்படுகிறது.

i. கலையென்றால் என்ன?
ii. "மைமேசிஸ்" என்பதன் பொருள் யாது?
iii. நுண்கலை என்பதற்கு ஆசிரியர் கூறும் வரைவிலக்கணம் யாது?
iv. பயன்கலைக்குள் அடங்குபவை எவை?
v. முத்தமிழ் என்பதை ஆசிரியர் எவற்றினைக் கொண்டு வரையறுக்கிறார்?

(12 புள்ளிகள்)

**03) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பினை தெரிந்து 300 - 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.**

அ. இயற்கையை நேசிப்போம்
ஆ. இன்றைய சூழலில் ஊடக சுதந்திரம்
இ. மனித வாழ்வில் பன்மொழி அறிவு
ஈ. தமிழ் இலக்கிய விமரிசன வளர்ச்சியில் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் பங்களிப்பு
உ. கற்றனைத்தூறும் அறிவு

(25 புள்ளிகள்)

## பகுதி - II

**04)** அ. சங்கமருவிய கால இலக்கியங்களைப் பொருளடிப்படையில் வகைப்படுத்துக.
ஆ. "சங்கமருவிய காலம் காப்பியங்களின் தோற்ற காலம்" ஆராய்க.
இ. பல்லவர்கால பக்தி இலக்கிய வளர்ச்சிக்கு சங்க மருவிய கால பக்தி இலக்கிய கர்த்தாக்களின் பங்களிப்பினை விளக்குக.

(15 புள்ளிகள்)

**05)** அ. சோழர்காலம் "காவியகாலம்" என்பதற்கான காரணங்களை விளக்குக.
ஆ. சோழர்கால இலக்கியங்களில் ஒட்டக் கூத்தரின் பங்களிப்பினைக் குறிப்பிடுக.
இ. சோழர் காலத்தெழுந்த சிற்றிலக்கியப் பண்புகளைத் தருக.

(15 புள்ளிகள்)

**06)** அ. யாழ்ப்பாண மன்னர் கால இலக்கியங்களை வகைப்படுத்துக.
ஆ. யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் பல்துறை சார்ந்த இலக்கியங்கள் தோன்றியமைக்கான காரணங்களை ஆராய்க.
இ. யாழ்ப்பாண மன்னர் காலத்தில் கண்ணகி வழக்குரை பெறும் முக்கியத்துவம் பற்றிக் கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

**07)** பின்வருவோரில் இருவர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.

அ. மஹாகவி து.உருத்திரமூர்த்தி

ஆ. கே.டானியல்

இ. நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

ஈ. செ.கணேசலிங்கன்

(15 புள்ளிகள்)

**08)**

அ.

i. பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தைச் சுட்டிக் காட்டி பொருள் மயக்கமற்ற முறையில் திருத்தி எழுதுக.
மூர்த்தி ஆணையாளர் நீர்ப்பாசனத்திணைக்களம் நேற்றுக் காலமானார்.

ii. பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி வழுவற்ற வகையில் அவ்வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
நகரசபை உறுப்பினருள் ஒருவரைத் தவிர ஏனையோர் சமுகமளித்தனர்.

iii. வீதியால் சென்ற வாகனம் மரத்தை ஆட்டியது. இப்பிறவினை வாக்கியத்தை தன்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

iv. தேய் எனும் வினையடி செயற்படு பொருள் குன்றிய வினையாகவும் குன்றாத வினையாகவும் வர வாக்கியம் எழுதுக.

v. பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி பிழையற்ற வகையில் எழுதுக.
அ. வயலில் அருவி வெட்டு நடைபெறுகின்றது
ஆ. செலவழித்து விஞ்சிய பணத்தைச் சேமித்தனர்

(2×5=10 புள்ளிகள்)

ஆ. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

i. தொழிற்பெயர்

ii. வெடிப் பொலி (வல்லின) எழுத்துக்களின் உச்சரிப்பு தன்மை

iii. வியங்கோள்வினை

(05 புள்ளிகள்)